கடன்களையும் குறிப்பிடுகிறது. இந்த மட்டத்தில் கிடைத்த வெளிநாட்டு உதவி, நிரம்பலர்கள் காரணமாகவும் குறுங்காலக் கொடுகடன் காரணத்தாலும், நாடு அடைந்திருக்கும் கடன்பட்ட நிலையை மேலும் கூட்டாதிருக்க உதவியது. உண்மையில் (ஓர் ஆண்டு இறுதியிலிருந்து மற்றைய ஆண்டு இறுதிவரை) நிரம் பலர் கொடுகடன்களையும் உள்ளடக்கிய நாட்டின் குறுங்கால படுகடன்கள் ரூ. 914 இலட்சத்தினுல் குறைந்தன.

இத்துடன் பன்னுட்டு நாணய நிதியத்திலிருந்து சென்மதி நிலுவைக்குக் கிடைத்த மூலவளங்கள் ரூ 2,728 இலட்சமாகும். ஏற்றுமதித் தளம்பலுக்கு இழப்பு ஈட்டு நிதியிடல் திட்டத்தின்கீழ் ரூ. 1,580 இலட்சம் கிடைக்கத் தக்கதாக இருக்கையில், 1975ஆம் ஆண்டிற்கான எண்ணை வசதி முடிவின்கீழ் இலங்கைக்குரிய இறுதித் தொகையாக ரூ. 1,148 இலட்சம் வழங்கப்பட்டது. பழைய எடுப்பனவுகளின் பொருட்டு ரூ. 1,899 இலட்சம்கொண்ட பன்னுட்டு நாணய நிதியத்தின் மீளக்கொள்வனவுகள் செலுத்தப்பட்ட நிலையில் சென்மதி நிலுவையினைத் தாங்க பன்னுட்டு நாணய நிதியமூலங்கள் வழங்கிய தேறிய தொகை ரூ. 867 இலட்சமாகும்.

முன்பு கூறியதற்கமைய பெறப்பட்ட பன்னுட்டு நாணய நிதிய மூலங்களும், கடன் கொடுக்கல் வாங்கல்களும், நாட்டில் நிலவிய குறையிலும் பார்க்கக் கணிசமானளவு எஞ்சியிருந்ததின் காரணமாக நாட்டின் வெளிநாட்டுச் சொத் துக்களை ரூ. 5,683 இலட்சத்தினுல் கட்டியெழுப்பத் துணைநின்றன. அத்துடன், வர்த்தகப் பங்காளருடன் இலங்கை வைத்திருந்த இருபுடைக்கணக்குகளிலுள்ள படுகடன்களைக் குறைக்கவும் இலங்கைக்கு இது துணைசெய்தது. இவ்வகையினுல் குறைக்கப்பட்ட பொறுப்புக்கள் ரூ. 731 இலட்சமாக விளங்கின.

## அரசின் இறைத் தொழிற்பாடுகள்

1976ஆம் ஆண்டுக்கான இறைத் தொழிற்பாடுகள் பொருளாதார நட வடிக்கையில் அரசின் விரிவுபடுத்தப்பட்ட பங்கினை மிகத் தெளிவாகக் குறிக் கின்றன. அரசின் தேறிய செலவு, மொத்தத் தேசிய உற்பத்தியில் 35.9 சத வீதத்தைக் கொண்டிருந்ததுடன் ஒப்பிடுகையில் 1975இல் 32.8 சதவீதமாக வும், முன்னைய 10 ஆண்டுகளில் சராசரியாக 31.6 சதவீதமாயுமிருந்தது, இவ்வதிகரிப்புக்கு முக்கியமாக அரசினுல் மேற்கொள்ளப்பட்ட மூலதனச்செல வின் உயர்ந்த மட்டமே காரணமாகும். மீண்டெழும் செலவில் மொத்தத் தேசிய உற்பத்தியின் பங்கு ஏறக்குறைய 24 சதவீதமாக நிலையாயிருந்தது.

அரசிறையைப் பொறுத்தளவில் சில ஆண்டுகள் தவிர, அரசிறை/மொத்தத் தேசிய உற்பத்தி விகிதம் மீண்டெழும் செலவு/மொத்தத் தேசிய உற்பத்தியின் விகிதத்திலும் குறைவாக இருக்கும் தன்மையைக் கொண்டிருந்தது. உண்மை யில், 1973ஆம் இறையாண்டில் 26.6 கொண்ட உச்சத்தை அடைந்த அரசிறை/ மொ. தே. உ. விகிதம், 1976இல் 23.8 ஆக வீழ்ச்சியடைந்தது.

1976இல் இறைச்செயலாற்றம் ரூ. 1,280 இலட்சம்கொண்ட நடைமுறைக் கணக்குக் குறையொன்றை வெளிப்படுத்துகின்றது. ஒப்பிடுகையில் 1975இல் ரூ. 1,420 இலட்சம்கொண்ட குறை ஒன்று காணப்பட்டது. அரசின் மீண் டெழும் செலவை நிதியீட்டுவதற்காகப் பயன்படுத்தப்பட்ட மூலவளக் கடன் பாடுகளின் அளவை நடைமுறைக்கணக்குக் குறை எடுத்துக்காட்டுகின்றது.

1976க்கான இறைத் தொழிற்பாடுகளின் சுருக்கமும், 1977க்கான ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகளும் அட்டவணை 14இல் காட்டப்பட்டுள்ளன. கடன்பாடுகளைப் பொறுத்தவரை, கடன்கரைப்பு நிதியங்களினதும், கடன்தீர் கொடுப்பனவுகளினதும் விளைவை உள்ளடக்கமாட்டாதென வரையறை செய்யப்பட்டுள்ள அரசின் தேறிய பணக்குறை பின்னிணைப்பு அட்டவணை 9இல் தரப்பட்டுள்ளது.

## அட்டவணை 14

## அரசின் இறைத் தொழிற்பாடுகள்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| விடயங்கள் | 1974 | 1975 | 1976 ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் | 1976 தற்காலிக மானவை | 1977 ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|---|
| அரசிறை1 ... | 4,787 | 5,084 | 5,645 | 5,739 | 6,062 |
| மீண்டெழும் செலவு ... | 4,506 | 5,153 | 5,355 | 5,554 | 5,888 |
| முற்பணக் கணக்குகள் தொழிற்பாடுகள் (குறை–/ மிகை+) ... | —39 | — 73 | —100 | —312 | — |
| நடைமுறைக் கணக்கு (+மிகை/குறை–) ... | 242 | — 142 | + 190 | —128 | 174 |
| மூலதனச் செலவு ... | 1,841 | 2,556 | 2,486 | 3,448 | 2,904 |
| அவற்றில் கடன்கரைப்பு நிதியம், கடன்தீர் கொடுப்பனவுகள், பன்னாட்டு நிதியஞ்சார்ந்த நிறுவனங்களுக்கான கொடுப்பனவுகள் உதவுதொகைகள் ... | (564) | (596) | (649) | (662) | (848) |
| வரவு செலவுத் திட்டக்குறை2 ... | 1,599 | 2,699 | 2,296 | 3,576 | 2,730 |
| குறைக்கு நிதியிடல் | | | | | |
| 1. உள்நாட்டு மூலம் ... | 910 | 1,610 | 1,300 | 2,270 | 1,370 |
| (அ) வங்கியல்லாச் சந்தை கடன்பாடுகள் ... | 976 | 1,075 | 1,300 | 1,160 | 1,300 |
| (ஆ) சந்தையல்லாக் கடன்பாடுகள் | —54 | 379 | — | 471 | 70 |
| (இ) வங்கித் தொழில் முறை3 ... | —12 | 156 | — | 639 | — |
| 2. வெளிநாட்டு நிதி ... | 650 | 1,059 | 1,000 | 1,340 | 1,350 |
| செயற் திட்டக் கடன்கள் ... | 79 | 275 | வி. கி. | 327 | வி. கி. |
| பண்டக் கடன்கள் ... | 319 | 380 | வி. கி. | 633 | வி. கி. |
| நன்கொடைகள் ... | 252 | 404 | வி. கி. | 380 | வி. கி. |
| 3. பண நிலுவைகளின் பயன்பாடு... ... | 39 | 31 | — 4 | — 33 | 10[4] |
| அரசின் நிதித் தொழிற்பாடுகளின் விரிவுத் தாக்கம் ... | 24 | 184 | — 4 | 605 | 10 |

மூலங்கள்: இலங்கை மத்திய வங்கியும், திறைசேரியும்.

1. வெளிநாட்டு நன்கொடைகளின் கீழ் காட்டப்பட்ட வருவாய், மூலதனக் கொடைகளை உள்ளடக்கவில்லை.
2. தேறிய பணக்குறையின் விபரங்கள் தொடர்பாக பிற்சேர்க்கையில் உள்ள அட்டவணை 9ஐப் பார்க்கவும்.
3. வெளிநாட்டில் உள்ள பன்னாட்டு நிதி நிறுவனங்களுக்கான உதவுதொகைகளை நிறைவேற்ற மத்திய வங்கி கொடுத்த சிறப்பு முற்பணங்களை உள்ளடக்குகிறது. 1974ல் ரூபா 27 இலட்சங்கள் 1975ல் ரூபா 26 இலட்சங்கள்.
4. குழுநிலைத் திருத்தங்களின் கணக்கின்படி புகைவண்டிப் பகுதியின் செலவினம் ரூ. 100 இலட்சங்களால் அதிகரித்தது.

**செலவினம்**

1976இல் அரசின் மொத்தச்செலவினம் ரூ. 93,140 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டைவிட ஏறக்குறைய 20 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்தது. 1976இன் செலவினம், மீண்டெழும் வாக்குகளின்கீழ் ரூ. 55,540 இலட்சத்தையும், முற்பணக் கணக்குகளின்கீழ் தேறிய வெளிக்கொடுப்பனவாக ரூ. 3,120 இலட்சத்தினையும், மூலதனவாக்குகளின்கீழ் ரூ 27,860 இலட்சத்தையும், கடன்கரைப்பு நிதியத்துக்கும், கடன்தீர் கொடுப்பனவுக்குமான உதவு தொகைகளாக் ரூ. 6,620 இலட்சத்தினையும் கொண்டிருந்தது.

1969/70 இலிருந்து மொத்தச் செலவினத்தில் ஏற்பட்ட சராசரி ஆண்டு அதிகரிப்பு ஏறக்குறைய 20 சதவீதமாகும். செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு இரு முக்கிய காரணங்களினால் ஏற்பட்டதாகக் கூறலாம் அவை, 1973/75 காலப்பகுதியில் உலகம் முழுவதிலும் ஏற்பட்ட பணவீக்கமும், 1976இல் உச்சத்தை அடைந்த அரசின் முதலீட்டுத் திட்டத்தில் ஏற்பட்ட அதிகரிப்புமாகும்.

1976இல் உண்மையான மீண்டெழும் செலவு ரூ. 55,540 இலட்சமாகும். இது முன்னைய ஆண்டைவிட 7.8 சதவீத அதிகரிப்பைக் கொண்டதாகும். துணை ஒதுக்கீடான ரூ. 3050 இலட்சத்தினை உள்ளடக்கிய ரூ. 57,640 இலட்சங்கொண்ட மொத்த ஒதுக்கீட்டுடனொப்பிடின், உண்மையான செலவினம் 3.6 சதவீதங் கொண்ட கீழ்ச் செலவைக் காட்டுகிறது.

மீண்டெழும் செலவின் அமைப்பு தற்பொழுது ஒழுங்கான முறைக்கேற்ப அமைந்துள்ளது. 1976இல் கல்வியும் உடல்நலமும் உள்ளடக்கிய சமூகப்பணிகள் 22 சதவீதத்துக்கு வகை கூறின. உணவு உதவுதொகை 17 சதவீதத்தை உள்ளடக்கியது குடியியல், பாதுகாப்பு நிருவாகத்துக்கு 16சதவீதம் தேவைப்பட்டது. பொதுப்படுகடன் மீதான வட்டி 15 சதவீதமாயும், இளைப்பாறிய அரச ஊழியர்களுக்கான ஒய்வூதியம் 7 சதவீதமாகவும் அமைந்தது. இத்தொகுதியில் ஏற்ற இறக்கங்கட்கு உட்படும் ஒரேயொரு விடயம் உணவு உதவு தொகையாகும். நுகர்வோருக்குக் குறிப்பிட்ட இடருதவிகள் வழங்கப்பட்ட நிலையிலும், 1976இல் பண்டங்களின் குறைந்த விலைகள் உணவு உதவுதொகையின் பங்கில் 1975இன் 23 சதவீதத்திலிருந்து 1976இல் 17 சதவீதமான வீழ்ச்சியொன்றுக்கு வழிவகுத்தன.

பொதுப்படுகடனை நடாத்துவதில் உள்ள செலவு, மெதுவாக, ஆனால் ஆண்டுதோறும் நிலையான அதிகரிப்பினைக் காட்டுகிறது; இது அரசினால் மேற்கொள்ளப்பட்ட அதிகரிக்கப்பட்ட கடன்பாட்டுத் திட்டத்திலிருந்து நன்கு தெளிவாகின்றது. இதன் முதலீடுகள் திருப்திகரமான வருவாயைத் தருமாயின், அரசு அதிகரித்துச் செல்லும் படுகடன் தீர்ப்பனவுப் பளுவுக்கான போதிய இழப்பீட்டைப் பெறமுடியும்

1976இல்(தேறிய)மூலதனச்செலவு,முன்னையஇறையாண்டைவிட 42சதவீதங் கொண்ட பெருமளவான அதிகரிப்பொன்றைப் பதிவு செய்தது. முழுமையான நியதிகளின்படி இது ரூ. 8260 இலட்சத்தால் அதிகரித்தது. கடன்கரைப்பு நிதிய உதவுதொகைகளையும் கடன்தீர் கொடுப்பனவுகளையும்நீக்கின் உண்மையான அபிவிருத்திச்செலவு ரூ 27,860 இலட்சமாகும். தொடர்பான மொத்த ஒதுக்கீடான ரூ. 30,560இலட்சத்துடனொப்பிடின் இது 9சதவீதமான கீழ்ச்செலவைக் காட்டுவதுடன் கடந்த பல ஆண்டுகளில் இதுவே ஆகக் குறைந்த மட்டமாகவும் உள்ளது. அண்மைக்காலங்களில் கீழ்ச்செலவின் வழமையான மட்டம் 20சதவீதத்திற்கும் 25சதவீதத்திற்குமிடையில் வேறுபட்டது.

முன்னைய ஆண்டுகளைப் போன்றே மூலதனச் செலவின் பெரும்பகுதி பொருளாதாரத்தின் உள்ளமைப்பு அபிவிருத்திக்காகச் செலவு செய்யப்பட்டது. நீர்ப்பாசனம், மின்வலு, பெருந்தெருக்கள் என்பனவற்றிற்கான செலவு ரூ.5530இலட்சமாகும். வேளாண்மையும் காணியும் ரூ. 1880 இலட்சத்தை அடக்கின. பொது நிருவாகம், உள்ளூராட்சி உள்நாட்டு அலுவல்கள் என்பன ரூ. 900 இலட்சத்தைச் செலவு செய்தன. அஞ்சல் தொலைதொடர்புப் பணிகள் அபிவிருத்திக்கு ரூ. 510 இலட்சம் தேவைப்பட்டது. கைத்தொழில்கள், மீன்பிடி, கப்பல் கட்டுதல், சுற்றுலாத்தொழில் ஆகியவற்றுக்கான செலவு ரூ. 6080 இலட்சமாகும்.

1976 இறையாண்டில் முற்பணக் கணக்குகளின் கீழான தேறிய வெளிக்கொடுப்பனவுகள் ரூ. 3120 இலட்சத்துக்கு வகை கூறின. அரச திணைக்களங்களுக்கு ரூ. 1630 இலட்சங் கொண்ட முற்பணம், அரச கூட்டுத்தாபனங்களுக்கும் இலங்கை – சீன வர்த்தகக் கணக்குகளுக்கும் ஒவ்வொன்றுக்கும் ஏறக் குறைய ரூ. 500 இலட்சம், களஞ்சியங்களினதும் பொருட்களினதும் கொள்வனவுகளை நிதியீட்டுவதற்கான முற்பணம் ரூ. 170 இலட்சம் ஆகியன குறிப்பிடத்தக்க விடயங்களாகும். இம் மேலதிக வரவு செலவுத்திட்ட வெளிக்கொடுப்பனவுகள், அரசின் நடைமுறைச் செலவின் ஒரு பகுதியை அடக்கியதுடன் அரசின் இறைத் தொழிற்பாடுகளின் மீதான் மொத்த நடைமுறைக்கணக்கு நிலுவையில் பாதகமான விளைவு ஒன்றை ஏற்படுத்தியது.

அரசிறை

1975க்கான உண்மையான அரசிறையுடனொப்பிடின் 1976இல் சேகரிப்புக்கள் 13 சதவீதங்கொண்ட அதிகரிப்பொன்றை வெளிப்படுத்தின. 1976க்கான மொத்த அரசிறை ரூ 57,390 இலட்சமாக விளங்கியது. வருமானவரிகள் (ரூ 1650 இலட்சம்) இறக்குமதித் தீர்வைகள் (ரூ, 1400 இலட்சம்) தேயிலைவரி (ரூ. 1110 இலட்சம்) விற்பனைவரிகள் ( ரூ. 690 இலட்சம்) ஆகியன கணிசமான அதிகரிப்புக்களைப் பதிவுசெய்தன. வெ. செ. உ. சா. விலிருந்தான தேறிய வரவுகள் ரூ. 190 [1] இலட்சத்தால் அதிகரித்தன. மறுபுறம் ஏற்றுமதித் தீர்வைகள் (ரூ. 90 இலட்சம்) புகையிலை வரி (ரூ. 80 இலட்சம்) குடிவகை உற்பத்திகள் (ரூ. 160 இலட்சம்) ஆகியவற்றில் ஓரளவு வீழ்ச்சிகள் அவதானிக்கப்பட்டன.

வருமான வரிகளினதும், விற்பனை வரிகளினதும் திருந்திய செயலாற்றத்துக்கு 1975/76 காலப்பகுதியில் நிலவிய உயர்ந்த விலைகளே பெரும்ளவு காரணமாகும். இறக்குமதித் தீர்வைகள் அவ்வாண்டின் இறக்குமதிகளின் உயர்ந்த பெறுமதியை எடுத்துக் காட்டுகின்றன. ஏற்றுமதித் தீர்வையிலேற்பட்ட வீழ்ச்சிக்கு 1975 நவெம்பரில் தெங்கு உற்பத்திகளின் மீதான ஏற்றுமதித் தீர்வை மீளப்பெறப்பட்டமையும் 1976இல் தேயிலை ஏற்றுமதிகளிலேற்பட்ட வீழ்ச்சியுமே காரணங்களாகும். புகையிலையிலிருந்து சேகரிக்கப்பட்ட வருமானம் (உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட இலைகளின் மீதானவரியும் இறக்குமதி செய்யப்பட்ட இலைகளின் மீதான தீர்வையும்) 1976இல் அதிகரித்தது.

---

1. 1976இல் மரபுவழியல்லா ஏற்றுமதிகளின் திருந்திய செயலாற்றமே வெ. செ. உ. சா. வின் வரியிலேற்பட்ட குறைந்த வருவாய்க்குக் காரணமாகும்.

1976இன் அரசிறையில் ஏற்றுமதி வரிகள், இறக்குமதித் தீர்வைகள், வெ. செ. உ. சா. கள் 39 சதவீதத்தை உள்ளடக்கின. இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களில் பெருமளவு தங்கியிருக்கும் விற்பனைவரிகள் 13சதவீதத்தைக் கொண்டன. இது பொருளாதாரத்தின் வெளிநாட்டு வர்த்தகத்துறை மீது அரசின் அரசிறை தங்கியிருப்பதைத் தெளிவாக விளக்குவதுடன், வரி அடிப் படையைப் பன்முகப்படுத்துவதன் தேவையையும் எடுத்துக் காட்டுகின்றது.

**வரவு செலவுத்திட்டக் குறையை நிதியிடல்**

1976க்கான வரவுசெலவுத்திட்டக் குறை ரூ. 35,760 இலட்சமாக விளங்கி மூலமதிப்பீட்டை ரூ. 12,800 இலட்சத்தால் விஞ்சியது. இது முற்பணக் கணக் கின் கீழ் ரூ. 9280 இலட்சங்கொண்ட துணைமதிப்பீடுகளையும்[1] ரூ. 3120 இலட்சம் கொண்ட தேறிய வெளிக் கொடுப்பனவுகளையும் கொண்டதாகும். மேலதிகக் குறையின் ஒருபகுதி, வங்கித் தொழில் முறையின் கடன்பாடுகளால் நிதியிடப் பட்டது. வங்கித்தொழில்முறை வழங்கிய தொகையை உள்ளடக்கிய மொத்த உள்நாட்டுக் கடன்பாடுகள் ரூ. 22,700 இலட்சத்துக்கும் வெளிநாட்டுக் கடன் களும் நன்கொடைகளும் ரூ. 13,400 இலட்சத்துக்கும் வகைகூறின.

வரவு செலவுத்திட்டத்தை நிதியிடுவதற்குப் பெறப்பட்ட வெளிநாட்டு மூலவளங்கள் ரூ. 3270 இலட்சம்கொண்ட செயற்றிட்டக்கடன்களையும் ரூ. 6330 இலட்சம் கொண்ட பண்டக்கடன்களையும் ரூ. 3800 இலட்சம் கொண்ட நன் கொடைகளையும் உள்ளடக்கி இருந்தன.

உள்நாட்டுத் துறையில் வங்கியல்லாச் சந்தைக்கடன்பாடுகள் ரூ. 11,600 இலட்சத்தை உதவின. அண்மை ஆண்டுகளைப் போலவே அரசின் நேரடிக் கட்டுப் பாட்டு மூலங்கள் (தேசியசேமிப்பு வங்கி, ஊழியர் சேமநிதி, காப்புறுதிக் கூட்டுத் தாபனம் ஆகியன) உள்நாட்டுச் சேமிப்புக்களைத் திரட்டுவதற்கு பெரிதும் பொறுப்பாயிருந்தன. உள்நாட்டுச் சந்தையல்லா மூலங்களின் பங்கு ரூ. 4710 இலட்சத்துக்கு வகைகூறியது. பிற்போடப்பட்ட கொடுப்பனவு முறைகளின் மீதான உணவுக் கொள்வனவுகள் ரூ. 2140 இலட்சமாக விளங்கியதுடன் திறை சேரியுடனான வைப்புக்கள் மேலும் ரூ. 1030 இலட்சத்தை வழங்கின மிகுதி, திறை சேரியின் விருப்பின் பேரில் நிருவாகக் கடன்பாடுகளிலிருந்தும் பலவகை நிதி யங்களிலிருந்தும் பெறப்பட்டது.

எஞ்சிய தொகையான ரூ. 6390 இலட்சம், வங்கித்தொழில் முறையினால் நிதியிடப்பட்டது. மத்திய வங்கி திறைசேரி உண்டியல்களின் கொள்வனவு வாயி லாக ரூ. 3660 இலட்சம் கொண்ட தொகைக்கு நிதியிடல்செய்ய மிகுதித் தொகைக்குப் பெரிதும் ரூபாப் பிணைகளின் கொள்வனவு வாயிலாக வர்த்தக வங்கிகளினால் உதவப்பட்டது.

அரசப் பண நிலுவைகளில் ரூ. 330 இலட்சம் கொண்ட அதிகரிப்புக்குச் சீராக்கம் செய்யப்பட்டபோது அரசின் இறைத்தொழிற்பாடுகளின் தேறிய விரிவுத்தாக்கம் ரூ. 6050 இலட்சமாக விளங்கியது.

---

1. நதிப்பள்ளத்தாக்கு, மின்சார அபிவிருத்தி ஆகியவற்றை நிதியிடுவதற்கான ஒதுக்குகள் ரூ. 1760 இலட்சம், வரட்சி இடருதவி வேலைகளுக்கு ரூ. 1650 இலட்சம், புதிய ஆசிரியர்களுக்கான தனிப்பட்ட சம்பளங் களை நிதியிடுவதற்காக ரூ. 760 இலட்சம், இளைப்பாற்று நிதியத்துக்கான ஒதுக்குகளுக்குதவுவதற்காக ரூ. 790 இலட்சம், பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு மூலதன உதவுதொகை ரூ. 600 இலட்சம் புகைவண்டிப் பகுதியின் இயக்கு பொறிகள்-வண்டிகள் தொகுதிகளின் கொள்வனவுக்கு ரூ. 640 இலட்சம் (உருள் முதற் றொகுதி) ஆகிய குறிப்பிட்ட விடயங்களை அடக்குகின்றன.

## பொதுப்படுகடன்

1976 இறையாண்டில் பொதுப்படுகடன் 21 சதவீதத்தால் அல்லது ரூ. 30,950 இலட்சத்தால் ரூ. 1,76,590 இலட்சமாக அதிகரித்தது. உள்நாட்டுப்படுகடனின் பங்கு ரூ. 1,26,910 இலட்சமாகவும் மிகுதியான ரூ. 49,680 இலட்சம் வெளிநாட்டுப் படுகடனாகவுமிருந்தது. கடன்கரைப்பு நிதியசெலுத்து தொகைகளுக்குச் சீராக்கம் செய்யப்பட்டபோது (ரூ. 20,390 இலட்சம்) தேறிய உள்நாட்டுப்படு கடன் ரூ. 1,06,530 இலட்சமாக விளங்கியது. வெளிநாட்டுக்கடன்கள்மீது எதுவித கடன்கரைப்பு நிதிய உதவு தொகைகளுமில்லை.

1976இல் ரூ. 14,570 இலட்சமாக விளங்கிய ரூபாப் பிணைகளின் விற்பனைகளிலேயே உள்நாட்டுப்படுகடனின் பெரும்பகுதியுள்ளது, திறைசேரி உண்டியல் விற்பனைகள் (ரூ. 3500 இலட்சம்) வரி ஒதுக்குச்சான்றிதழ்கள் ஏனைய பல்வகை வரவுகள், நாணயச்சட்டவிதியின் 89ஆம் பிரிவின்கீழ் மத்திய வங்கி முற்பணங்கள் ஆகியவற்றை ஏனைய விடயங்கள் உள்ளடக்கும். 1976இல் ரூபாப்பிணைகளுக்கு வழங்கப்பட்ட உதவு தொகைகள் வர்த்தக வங்கிகளிலிருந்து பெறப்பட்ட 2400 இலட்சம் கொண்ட உதவுதொகைகளை எடுத்துக் காட்டுகிறது, மாறாக, கடந்த பல நிதியாண்டுகளில் வர்த்தக வங்கிகளிடமிருந்து எதுவித உதவுதொகைகளும் பெறப்படவில்லை அல்லது பெறப்பட்ட தொகை புறக்கணிக்கத்தக்கதாகவே இருந்தது. இதேபோல் ஆண்டினிறுதியில் 1976இல் திறைசேரி உண்டியல்களில் ஏற்பட்ட ரூ. 3500 இலட்சம் கொண்ட மொத்த அதிகரிப்பு மத்தியவங்கியினால் வைத்திருக்கப்பட்டது. கடந்த பல ஆண்டுகளில் அவதானிக்கப்பட்ட படிப்படியான வீழ்ச்சிக்குமாறாக, 1975இல் வங்கித் துறையால் வைத்திருக்கப்பட்ட உள்நாட்டுப் படுகடனின் பங்கின் அதிகரிப்பு 29.9 சதவீதத்திலிருந்து 1976இல் 30.6 சதவீதத்திற்கு அதிகரித்தது. 1970இல் வங்கித்தொழில் முறைமையினால் வைத்திருக்கப்பட்ட உள்நாட்டுப் படுகடனின் பங்கு 45.1 சதவீதமாயிருந்தது.

1976இல் வெளிநாட்டுப் படுகடன் ரூ. 12,630 இலட்சத்தால் அதிகரித்தது. முன்னைய ஆண்டின் 26 சதவீதம் மட்டுமேகொண்ட அதிகரிப்புடனொப்பிடின், இது, 34 சதவீத அதிகரிப்பைக்கொண்டுள்ளது. எனினும், இலங்கையின் பொருளாதார நடவடிக்கைக்கு நிதியிடுவதற்கான மூலவளங்களின் தேறிய மாற்றல்கள் (ரூ. 2300 இலட்சமாக விளங்கிய படுகடன் மீள்கொடுப்பனவுகள் நீங்கலாக) ரூ 7300இலட்சம் மட்டுமேயாகும். எஞ்சிய ரூ. 5,330 இலட்சங் கொண்ட தொகையானது, பெரும் பன்னாட்டு நாணயங்களில் ஏற்பட்ட செலாவணி வீத மாற்றங்களின் பொறுப்புக்களிலேற்பட்ட அதிகரிப்பில் காட்டப்பட்டுள்ளது, பன்னாட்டு நாணயங்களில் ஏற்பட்ட சம பெறுமதி மாற்றங்களும் எமது வெளிநாட்டுப்படுகடனில் ஓரளவு நிலையற்ற தன்மையை உருவாக்கியது.

1976இல் கிடைத்த திருந்திய ஏற்றுமதி வருவாய்கள், வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுவிகிதத்தில் (காரணியல்லாப்பணிகளினதும், பொருட்களினதும் ஏற்றுமதிகளின் சதவீதமாக) வெளிநாட்டுப்படுகடனின் தீர்ப்பனவுக்கொடுப்பனவுகள் 1975இன் 22.9 சதவீதத்திலிருந்தது 1976இல் 20.1 சதவீதமான வீழ்ச்சியொன்றுக்கு வழிவகுத்தது எனினும், உயர்ந்த வெளிநாட்டுப்படுகடன் விகிதமும் உள்நாட்டுப்படுகடனின் வட்டிப்பளுவும் கவனத்திற்குரியவையாகும். பொதுப் படுகடன்மீதான வட்டியும், மீளக் கொடுப்பனவுகளும் 1975இன் 61 சதவீதத்துடனொப்பிடின் 1976இல் மொத்தக் கடன்வருவாய்களின் 52 சதவீதத்துக்கு அல்லது ரூ. 14,320 இலட்சத்துக்கு வகைகூறின.